தமிழ் வளர்ச்சித் துறை

# அய்யன் திருவள்ளுவர் திருநாள்-2000



வள்ளுவர் கோட்டம், சென்னை

16 - 1 - 2000

# அய்யன் திருவள்ளுவர் திருநாள், 2000

## கையேடு

- அய்யன் திருவள்ளுவர் விருது - 2000
- சிறந்த நூல்களுக்கும் பதிப்பகங்களுக்கும் பரிசுகள்
- திரு. வெ. சாமிநாத சர்மா நூல்கள் நாட்டுடைமை
- அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி
- ஆட்சித் தமிழ், தமிழ்மொழி வரலாறு—நூல்கள் வெளியீடு

73/3–1

# தகுதியுரை

**திரு. த. சி. க. கண்ணன்** தஞ்சாவூரில் *30-03-1941* இல் பிறந்தவர். தந்தை திரு. த. நீ. சிவலிங்கம், தாய் திருமதி சி. இலக்குமணி அம்மாள். திரு. த. சி. க. கண்ணன் இந்தி, வடமொழி ஆகியவற்றில் முதுகலைப் பட்டங்கள் பெற்றவர். கல்லூரி விரிவுரையாளராகவும், மின்வாரிய அலுவலராகவும், விமானத்துறை அமைச்சகம், தொடர்வண்டிப் போக்குவரத்து அமைச்சகம் ஆகியவற்றில் மத்திய அரசின் இந்தி ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர். தற்போது வணிகத்துறையில் ஈடுபட்டுள்ள திரு. த. சி. க. கண்ணன் தமிழ், ஆங்கிலம், இந்தி, வடமொழி ஆகிய மொழிகளில் சிறந்த பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் திகழ்பவர். அனைத்திந்திய வானொலியில் பேசியும், தமிழ், ஆங்கிலம், இந்தி முதலிய பன்மொழி இதழ்களில் தொடர்ந்து எழுதியும் தமிழ்மொழி-பண்பாட்டுச் சிறப்பைப் பரப்பி வருபவர். இதுவரை அனைத்திந்திய அளவில் ஏழுமுறை "தேசிய மொழிகள் மாநாடு"களை நடத்தி, மொழி வளத்தாலும் இலக்கியங்களாலும் ஒருமைப்பாட்டு உணர்வு சிறந்திடத் தொண்டாற்றி வருபவர். 'தேசிய திருவள்ளுவர் மாநாடு' ஒன்றை நடத்தி இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் திருக்குறளின் பெருமையை அறிந்துகொள்ளும் வகையில் இவர் ஆற்றியபணி குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் இந்தி இதழ்களில் சிறுகதைகளை எழுதியுள்ளதோடு தமிழக எழுத்தாளர்களின் சிறந்த சிறுகதைகளையும் புதினங்களையும் இந்தியில் மொழிபெயர்த்தும் நூல்களாக வெளியிட்டுள்ளார். பதினாறு வடமொழி இலக்கியங்களுடன் திருக்குறளை ஒப்பிட்டு இவர் எழுதியுள்ள 'குறள்சிந்தன்' எனும்

ஒப்பாய்வு நூலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எழுதிய 'குறளோவியத்தை' இந்தியில் மொழிபெயர்த்து இவர் வெளியிட்டுள்ள 'குறள் ஆலேகன்' எனும் நூலும் குறிப்பிடத்தக்கவை. குறளோவியத்தை இவர் இந்தியில் மொழிபெயர்த்து வெளியிட்டமைக்காக இவருக்கு 1996 ஆம் ஆண்டில் சிறந்த இந்தி எழுத்தாளருக்கான விருது முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

குறள்நெறி, தமிழ்மொழி வளம்-பண்பாடு ஆகியவற்றைப் பிற மொழியினரும் அறிந்து போற்றும் வகையில் திரு. த.சி.க. கண்ணன் அவர்கள் ஆற்றிவரும் சீரிய பணியைத் தமிழக அரசு போற்றி உருபாய் ஒரு இலட்சமும் தங்கப்பதக்கமும் கொண்ட இரண்டாயிரமாவது ஆண்டிற்கான அய்யன் திருவள்ளுவர் விருதினை வழங்கிச் சிறப்பிக்கிறது.

தமிழ்நாடு அரசு, உலகப் பொது மறையாம் திருக்குறள் நெறிபரப்பும் பெருநோக்கில் ஆண்டுதோறும் தைத் திங்கள் இரண்டாம் நாளில், அய்யன் திருவள்ளுவர் திருநாளைச் சிறப்பாக நடத்தி வருகிறது.

## அய்யன் திருவள்ளுவர் விருது

1986 ஆம் ஆண்டு முதல் திருக்குறள் நெறி பரப்பும் பெருந்தகையாளர் ஒருவரை அரசு தெரிவு செய்து அய்யன் திருவள்ளுவர் விருது வழங்கிச் சிறப்பித்து வருகிறது. இவ்விருது ஆண்டுதோறும் அய்யன் திருவள்ளுவர் திருநாள் விழாவில் வழங்கப்பெற்று வருகிறது.

**இதுவரை இவ்விருது பெற்றோர் பட்டியல் வருமாறு :—**

1. 1986 தவத்திரு குன்றக்குடி அடிகளார்
2. 1987 திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்
3. 1988 திரு. ச. தண்டபாணி தேசிகர்
4. 1989 திரு. வ. சுப. மாணிக்கம்
5. 1990 திரு. கு. ச. ஆனந்தன்
6. 1991 திரு. சுந்தர சண்முகனார்
7. 1992 டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்
8. 1993 திரு. கல்லை தே. கண்ணன்
9. 1994 திருக்குறளார் திரு. வீ. முனிசாமி
10. 1995 திருமதி சு. சிவகாமசுந்தரி
11. 1996 முனைவர் மு. கோவிந்தசாமி
12. 1997 முனைவர் கு. மோகனராசு
13. 1998 முனைவர் இரா. சாரங்கபாணி
14. 1999 முனைவர் வா. செ. குழந்தைசாமி

## தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்.

"தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் அழகு காப்பாய் இதுதான் நீ செயத்தக்க எப்பணிக்கும் முதற் பணியாம்" என்னும் பாவேந்தரின் முழக்கத்தை அரசு தலைமேற்கொண்டு, தமிழுக்கு அழகூட்டும் நன் முயற்சியின் விளைவாக உருவாக்கப் பெற்றதே இவ்வருந்திட்டம்.

எண்ணற்ற நூல்கள் வெளிவருகின்றன. கால நீரோட்டத்தை எதிர்த்துப் பயன்தரத்தக்கனவாகத் திட்பமும் நுட்பமும் நிறைந்தனவாக உள்ளன சிலவே. அத்தகைய நூல்கள் வெளிவருதலின் இன்றியமையாமையை உணர்ந்தே, கதை புனைவோரை—காவியம் படைப்போரை—கட்டுரையாளர்களை ஊக்குவித்தற்குத் தமிழக அரசு ஆண்டுதோறும் பரிசு வழங்கிப் பாராட்டி வருகிறது.

தரமிகுந்த நூல்களைத் தமிழில் வெளியிட்டு உதவும் தகுதிமிக்காரையும் நெஞ்சார வாழ்த்த வேண்டும் என்ற கடமை உணர்ச்சி மேலீட்டால் பதிப்பகத்தாருக்கும் பாராட்டிதழ் வழங்கிச் சிறப்பித்து வருகிறது.

இத்திட்டம் முதன் முதலில் 1947 இல் தொடங்கப்பெற்றது. 1960 வரை தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் செயற்படுத்தப்பட்டது. 1961 முதல் தமிழக அரசினால் இத்திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. தொடக்கத்தில் முதற் பரிசாக 1,000 உருபாயும் இரண்டாம் பரிசாக சான்றிதழ் மட்டும் வழங்கப்பெற்று வந்தது.

17-04-1971 இல் இராசாசி மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பரிசளித்த தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அவ்விழாவிலேயே இரண்டாம் பரிசாக சான்றிதழுடன் 500 உருபாயும் வழங்கப்பெறும் எனவும், வரும் ஆண்டுகளிலிருந்து முதற் பரிசுத் தொகை 2,000 உருபாய் ஆகவும், இரண்டாம் பரிசுத் தொகை 1,000 உருபாய் ஆகவும் உயர்த்தப்பெறும் எனவும் அறிவித்தார்கள்.

அதன்படி 1972 ஆம் ஆண்டு முதல்

முதற் பரிசு ரூ. 2,000 ஆகவும்

இரண்டாம் பரிசு ரூ. 1,000 ஆகவும்

வழங்கப்பெற்று வந்தது. இந்நிலையே மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழக முதல்வராக மீண்டும் பொறுப்பேற்கும் வரை நீடித்தது.

15-01-1990 இல் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், வரும் ஆண்டிலிருந்து,

முதற் பரிசு ரூ. 5,000 ஆகவும்

இரண்டாம் பரிசு ரூ. 3,000 ஆகவும்

மூன்றாம் பரிசு ரூ. 1,000 ஆகவும்

உயர்த்தி வழங்கப்பெறுமென அறிவித்தார்கள். அவ்வாறே பரிசுத் தொகைகள் வழங்கப்பெற்று வந்தன.

பின்னர் 10-03-1998 ஆம் நாளும் 13156/தவ1/3/95-II எண்ணுமிட்ட கடிதத்தில் பரிசுத் தொகை உயர்த்தி வழங்கப்பட்டது. அதற்கிணங்க 1997 ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற நூல்களுக்கு

முதற் பரிசு ரூ. 10,000

இரண்டாம் பரிசு ரூ. 5,000

மூன்றாம் பரிசு ரூ. 2,000

என வழங்கப்பெற்றன.

15-01-1999 ஆம் நாளன்று நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாவில் **மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்கள், வருமாண்டிலிருந்து பரிசு பெறும் நூலினைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கும் பரிசுத் தொகை வழங்கப்பெறும் என அறிவித்ததற்கிணங்க, 22-06-1999 ஆம் நாளும், 408 நிலை எண்ணுமிட்ட தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அரசாணையில் பரிசு பெற்ற நூல்களை வெளியிட்ட பதிப்பகத்தார்களுக்கு ஒவ்வொரு நூலுக்கும் தலா ரூ. 2,000 வீதம் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

1998 ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற நூல்களுக்கு மேற்காணும் வகையில் பரிசுகள் தற்போது வழங்கப்பெறுகின்றன. 44 நூலாசிரியர்கள் 42 நூல்களுக்கு 2,46,000 உருபாயைப் பரிசுத் தொகையாகப் பெறுகின்றனர். 42 நூல்களைப் பதிப்பித்த 42 பதிப்பகத்தார் 84,000 உருபாயைப் பரிசுத் தொகையாகப் பெறுகின்றனர்.

பரிசுகள் விவரமும் பரிசுபெறும் நூலாசிரியர்களைப் பற்றிய சிறுகுறிப்பும் இக்கையேட்டினுள் இடம் பெற்றுள்ளன.

## திரு. வெ. சாமிநாதசர்மா அவர்கள் எழுதிய நூல்கள் நாட்டுடைமையாக்கம்.

*திரு. வெ. சாமிநாத சர்மா அவர்கள் கடலூர் மாவட்டம் வெங்களத்தூர் கிராமத்தைச் சார்ந்தவர். இவருடைய காலம் 17-9-1895—7-1-1978. இவர் சிறந்த மொழிபெயர்ப்பாளராகவும், நாடக நடிகராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்தார். அரசியலிலும் சிறந்து விளங்கினார். கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு, பிளேட்டோவின் அரசியல், கிரேக்கக் குடியரசு, அரிஸ்டாட்டில், இட்லரின் மெயின் கேம்ப் போன்ற 78 நூல்களை ஆக்கித்தந்தவர். இவர் தனது நூல்களின் பதிப்புரிமைகளை எழுத்தாளர் திரு.பெ.சு. மணி அவர்களுக்கு அளித்துள்ளார். திரு.வெ. சாமிநாத சர்மா அவர்களின் பணியைப் பாராட்டும் வகையில், அவர் எழுதிய நூல்களை நாட்டுடைமையாக்கி திரு.பெ.சு. மணி அவர்களுக்கு ரூ.5.00 இலட்சம் பரிவுத்தொகை வழங்கி தமிழக அரசு சிறப்பிக்கிறது.*

**திரு. வெ. சாமிநாதசர்மா அவர்கள் எழுதிய நூல்கள்.**

**அரசியல் (16)**

*அரசாங்கத்தின் பிறப்பு*
*அரசியல் கட்சிகள்*
*அரசியல் வரலாறு*
*ஆசிரியாவும் உலக சமாதானமும்*
*இந்தியாவும் தேவை*
*ஏப்ரல் 1919 அல்லது பஞ்சாப் படுகொலை*
*சமஸ்தன இந்தியா*
*நமது ஆர்ய வர்த்தம்*
*நமது தேசியக்கொடி*
*நாடும் மொழியும்*
*பிரஜைகளின் உரிமைகளும் கடமைகளும்*
*பிரிக்கப்பட்ட பர்மா*
*பிளேட்டோவின் அரசியல்*

புராதன இந்தியாவில் அரசியல்
பெடரல் இந்தியா
ராஜதந்திர யுத்தகளப்பிரசங்கங்கள்

**ஆட்சிமுறை (2)**

ஐக்கிய தேச ஸ்தாபனம்
பார்லிமெண்ட்

**தலைவர்கள் (23)**

அபிசீனிய சக்ரவர்த்தி
கமால் அத்தர்துர்க்
காந்தி யார்?
காந்தியும் விவேகானந்தரும்
காந்தியும் ஜவஹரும்
கார்ல்மார்க்ஸ்
சமுதாய சிற்பிகள்
சார்லஸ் டார்லின்
சி.வி. ராமன்
தாமஸ் எடிஸன்
தியாகமூர்த்தி பண்டித மோதிலால் நேரு
நான் கண்ட நால்வர்
பிரபுல்லசந்திரரே
மாஜினி (வாழ்க்கை வரலாறு)
முஸோலினி
ரூஸ்ஸோ (வாழ்க்கை வரலாறு)
லோகமான்ய திலகர்
ஹிட்லர்
ஸன்யாட்ஸென்
ஸர் ஐசக் நியூட்டன்
ஜகதீச சந்திரபோஸ்
ஸ்ரீரமண மகரிஷிகள்
ஸ்ரீராமகிருஷ்ணர் - ஒரு தீர்க்கதரிசி

**நாட்டு வரலாறு (8)**

*கிரீஸ் வாழ்ந்த வரலாறு*
*சீனாவின் வரலாறு*
*பாலஸ்தீனம்*
*புதிய சீனா*
*ருஷ்யா - சரித்திர வரலாறு*
*ருஷ்யாவின் வரலாறு*
*ஸ்பெயின் குழப்பம்*
*ஜெக்கோஸ்லோவிகியா*

**கடித இலக்கியம் (4)**

*அவள்பிரிவு*
*பிளேட்டோவின் கடிதங்கள்*
*மகளே! உனக்கு*
*வரலாறு கண்ட கடிதங்கள்*

**வாழ்வியல் நூல்கள் (கட்டுரை இலக்கியம்) (8)**

*இக்கரையும் அக்கரையும்*
*எப்படி வாழ வேண்டும்*
*சுதந்திரமும் சீர்திருத்தமும்*
*சுதந்திர முழக்கம்*
*நகைத்தல் நல்லது*
*நமது பிற்போக்கு*
*பெண்மையிலே தான் வாழ்வு*
*மனிதன் யார்?*

**நாடகம் (7)**

*அபிமன்யு*
*உத்தியோகம்*
*உலகக் கண்ணாடி*
*உலகம் பலவிதம்*
*பாணபுரத்து வீரன்*

*மனோதருமம்*

*லெட்சுமிநாதன்*

**பயண இலக்கியம் (1)**

*எனது பர்மா வழி நடைப்பயணம்*

**மொழிபெயர்ப்பு நூல்கள் (5)**

*சுதந்திரத்தின் தேவைகள் யாவை?*

*பிளேட்டோவின் அரசியல்*

*மகாத்மா காந்தி*

*மாஜியின் மனிதன் கடமை*

*ரூஸ்ஸோவின் சமுதாய ஒப்பந்தம்*

**சிறுகதை (2)**

*கௌரீமணி*

*தலை தீபாவளி*

**தொகுப்பு (1)**

*மாஜினியின் மணிமொழிகள்*

**ஆங்கில நூல் (1)**

Essentials of Gandhism

*கௌரீமணி*

# பரிசுகள் பெறுவோர் விவரம்

## பரிசு விவரப்

| வ.எண். | தலைப்பு எண்ணும் பெயரும் | நூலின் பெயர் | நூலாசிரியர் பெயர் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | 1. கவிதை | பனி பெய்யும் பகல் | ஈரோடு தமிழன்பன் |
| 2. | ,, | ஐக்கூ அருவிகள் | அமுதபாரதி (அமுதோன்) |
| 3. | ,, | மனப்பத்தாயம் | யுகபாரதி |
| 4. | 2. புதினம் | நல்ல நிலம் | பாவை சந்திரன் |
| 5. | ,, | கனவுச்சிறை | தேவகாந்தன் |
| 6. | ,, | சாயத் திரை | சுப்ரபாரதிமணியன் |
| 7. | 3. சிறுகதை | எம்.வி. வெங்கட்ராம் கதைகள் | எம்.வி. வெங்கட்ராம் |
| 8. | ,, | சமகாலப் புள்ளிகள் | கிருஷாங்கினி (பிருந்தா நாகராசன்) |
| 9. | ,, | அடுக்கு மாளிகை | பாவண்ணன் (பாஸ்கரன்) |
| 10. | 4 நாடகம் | விடுதலை வீரன் தீரன் சின்னமலை | கா. அரங்கசாமி |
| 11. | ,, | செருக்கழித்த செந்தமிழன் | தமிழன்னைதாசன் (வே. நடராசன்) |
| 12. | ,, | வானத்துக்கு வேலி | ப. முருகேசன் |

## பட்டியல்

| பரிசு நிலை | பரிசுத் தொகை | பதிப்பகத்தார் பெயர் | பரிசுத் தொகை |
|---|---|---|---|
| (5) | (6) | (7) | (8) |
| | ரூ. | | ரூ. |
| முதல் | 10,000 | பூம்புகார் பதிப்பகம், சென்னை-108. | 2,000 |
| இரண்டாம் | 5,000 | அமுதாலயம், சென்னை-17. | 2,000 |
| மூன்றாம் | 2,000 | சியாம்லால் பதிப்பகம், சென்னை-24. | 2,000 |
| முதல் | 10,000 | உமா பதிப்பகம், சென்னை-1. | 2,000 |
| இரண்டாம் | 5,000 | இலக்கு வெளியீடு சென்னை-94 | 2,000 |
| மூன்றாம் | 2,000 | காவ்யா, பெங்களூர்-38. | 2,000 |
| முதல் | 10,000 | கண்மணி கிரியேட்டிவ் வேவ்ஸ், சென்னை-4. | 2,000 |
| இரண்டாம் | 5,000 | அருள் புத்தக நிலையம் குறிஞ்சிப்பாடி-607 302. | 2,000 |
| மூன்றாம் | 2,000 | காவ்யா, பெங்களூர்-38. | 2,000 |
| முதல் | 10,000 | அறிவரசு பதிப்பகம், கோபிசெட்டிப்பாளையம். | 2,000 |
| இரண்டாம் | 5,000 | மாலதி பதிப்பகம், தஞ்சாவூர். | 2,000 |
| மூன்றாம் | 2,000 | கசடற பதிப்பகம், புதுச்சேரி-8. | 2,000 |

| (1) | (2) | (3) | (4) |
| --- | --- | --- | --- |
| 13. | 5. தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு, பற்றிய நூல்கள். | இவர்கள் பார்வையில் அகலிகை | க. ரத்னம் |
| 14. | ” | கவிதை உருவாக்கம் | ச. அகத்தியலிங்கம் |
| 15. | ” | அமைப்பியல் பின் அமைப்பியல் | ந. முத்துமோகன் |
| 16. | 6. தமிழ்க் கலைகள், கட்டுரை, வாழ்க்கை வரலாறு, பயணநூல் | உருவக் கோடுகள் | கோ. திருஞானம் |
| 17. | ” | தென்பாண்டித் தமிழரின் சிலம்ப வரலாறும் அடிமுறைகளும் (தொகுதி-2) | அ. அருணாசலம் |
| 18. | ” | சங்க இலக்கியத்தில் கலையும் கலைக் கோட்பாடும். | கு.வெ. பாலசுப்பிர மணியன் |
| 19. | 7 மானுடவியல், சமூகவியல், அரசியல் நிலவியல், சட்டம். | சமூக விஞ்ஞானி பெரியார் | ந. வேலுசாமி |
| 20. | ” | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை ஒரு கண்ணோட்டம் | கா.மு. பாதுசா |
| 21. | ” | அகிம்சைவழியில் சமதர்மம் | அகம்பன் |
| 22. | 8. பொருளியல், வணிகவியல், நிருவாக மேலாணமை | உங்களுக்குள்ளேயே உலகாளும சக்தி | எம். எலியாசு |

| (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| முதல் | 10,000 | ஐந்திணைப் பதிப்பகம் சென்னை-5. | 2,000 |
| இரண்டாம் | 5,000 | மணிவாசகர் பதிப்பகம் சென்னை-108. | 2,000 |
| மூன்றாம் | 2,000 | காவ்யா, பெங்களூர்-38. | 2,000 |
| முதல் | 10,000 | மாணவர் புத்தகப் பண்ணை, சென்னை-20. | 2,000 |
| இரண்டாம் | 5,000 | நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை. | 2,000 |
| மூன்றாம் | 2,000 | உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113. | 2,000 |
| முதல் | 10,000 | சரோசா வேலுசாமி சேலம். | 2,000 |
| இரண்டாம் | 5,000 | மணிமேகலைப் பிரசுரம், சென்னை-17. | 2,000 |
| மூன்றாம் | 2,000 | இந்திய இலவசக் கல்வி நிறுவனம் சென்னை-14. | 2,000 |
| முதல் | 10,000 | ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் சென்னை-8. | 2,000 |

| (1) | (2) | (3) | (4) |
| --- | --- | --- | --- |
| 23. | 8. பொருளியல், வணிகவியல், நிருவாக மேலாண்மை— தொடர்ச்சி. | திருவள்ளுவரின் செயல்நெறிக் கோட்பாடுகள் | என்.இ. இராமலிங்கம் |
| 24. | | பொருளியல் வரலாறு | இரா. நடராசன் |
| 25. | 9. கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல் | விண்வெளி அறிவியல் | ம. அருள் தளபதி |
| 26. | „ | அறிவியல் விளக்கம்- என்னைக் கேட்டால் | கே.என். ராமச்சந்திரன் |
| 27. | 10. மருத்துவம், நலவியல் | குழந்தைப்பேறு மருத்துவம் | செயம் கண்ணன் |
| 28. | „ | செந்தமிழும் சித்தமருத்துவமும் | மு. பசுமலையரசு |
| 29. | „ | மனிதனும் சுற்றுப்புற மாசுபாடும் | அ. சின்னதுரை, வ. கந்தசாமி, க. வைரவேல்பிரகாசு |
| 30. | 11. தத்துவம், சமயம், அளவையியல், அறவியல் | திருமூலரும் பேருரையும் | அ. அடிகளாசிரியர் |
| 31. | „ | வைணவமும் தமிழும் | ந. சுப்புரெட்டியார் |
| 32. | „ | சக்தி வழிபாடு | பகீரதன் |
| 33. | 12. உயிரியல், கானியல் வேளாண்மை, கால்நடை பேணுகை கால்நடை மருத்துவம். | நடமாடும் புரத வங்கிகள் | இரா. வசந்தகுமார் |

| (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| இரண்டாம் | 5,000 | திருவள்ளுவர் பதிப்பகம் சென்னை-88. | 2,000 |
| மூன்றாம் | 2,000 | மணியம் பதிப்பகம், குறிஞ்சிப்பாடி. | 2,000 |
| முதல் | 10,000 | சுவடு, சென்னை-24. | 2,000 |
| இரண்டாம் | 5,000 | வானதி பதிப்பகம், சென்னை-17. | 2,000 |
| முதல் | 10,000 | கர்ப்ப ரக்ஷாம்பிகை மகப்பேறு மையம், சென்னை-24. | 2,000 |
| இரண்டாம் | 5,000 | கிரிசா பதிப்பகம், பெங்களூர்-33. | 2,000 |
| மூன்றாம் | 2,000 | பிரகாசு பதிப்பகம் பழனி-624 601. | 2,000 |
| முதல் | 10,000 | திருவருள் நிலைய வெளியீட்டகம், குகையூர். | 2,000 |
| இரண்டாம் | 5,000 | திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-18. | 2,000 |
| மூன்றாம் | 2,000 | வானதி பதிப்பகம், சென்னை-17. | 2,000 |
| முதல் | 10,000 | சோலைத்தேனீ, வேலூர்-6. | 2,000 |

| (1) | (2) | (3) | (4) |
| --- | --- | --- | --- |
| 34. | 13. பொறியியல், தொழில்நுட்பவியல் | திரைப்படம் ஒரு வாழும் கலை | ப. பீர் முகமது |
| 35. | ” | தகவல் தொழில்நுட்பம் | இராம்குமார் (இர. இராமசாமி) |
| 36. | ” | மேல்நிலைக் கல்வியில் தொழிற் கல்வி | எச்.எஸ்.எஸ். லாரன்சு |
| 37. | 14. வரலாறு, தொல்பொருளியல் | விடுதலைத் தழும்புகள் | சு.பொ. அகத்திய லிங்கம் |
| 38. | ” | இந்திய விடுதலைப் போர் செந்தமிழ் தந்த சீர் | அ.மா. சாமி |
| 39. | ” | சோழர் ஆட்சியில் சமண சமய வளர்ச்சி | ஏ. ஏகாம்பரநாதன் |
| 40. | 15. குழந்தை இலக்கியம் | சித்திரப் பூக்கள் | கலைப்பொழிலன் (எம்.எஸ். தர்மலிங்கம்) |
| 41. | ” | நெல்சன் மண்டேலா | ச. கலியாணராமன் |
| 42. | ” | இந்திய விஞ்ஞானிகள் | சிவன் |

| (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| முதல் | 10,000 | கண்மணி கிரியேடிவ் வேவ்ஸ், சென்னை-4. | 2,000 |
| இரண்டாம் | 5,000 | திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை-18. | 2,000 |
| மூன்றாம் | 2,000 | பாரி நிலையம், சென்னை-108. | 2,000 |
| முதல் | 10,000 | தமிழ்ப்புத்தகாலயம் சென்னை-17. | 2,000 |
| இரண்டாம் | 5,000 | நவமணி பதிப்பகம் சென்னை-4. | 2,000 |
| மூன்றாம் | 2,000 | சைன ஆய்வியல் கழகம், சென்னை-79. | 2,000 |
| முதல் | 10,000 | செயலட்சுமி பதிப்பகம், சென்னை-114. | 2,000 |
| இரண்டாம் | 5,000 | முத்தமிழறிஞர் இல்லம், நெய்வேலி. | 2,000 |
| மூன்றாம் | 2,000 | கற்பகம் புத்தகாலயம் சென்னை-17. | 2,000 |
| மொத்தம் | 2,46,000 | | 84,000 |

# 1. கவிதை

*(1). ஈரோடு தமிழன்பன்,*

*ஜி1, இலாயிட்சு குடியிருப்பு,*
*இராயப்பேட்டை, சென்னை-14.*

*ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் 28-9-1936 இல் பிறந்தார். தந்தையார் செ. இரா. நடராசன்.*

*18 கவிதை நூல்கள், 12 உரைநடை நூல்கள் எழுதியுள்ளார். இவர் பாவேந்தர் விருது, கலைஞர் விருது, இந்திய அரசு வங்கி விருது ஆகிய விருதுகளை பெற்றவர். புதுக் கவிக்கோ, ஞானக் கவிக்கோ போன்ற பட்டங்கள் பெற்றுள்ளார்.*

*இவர் எழுதிய 'பனி பெய்யும் பகல்' எனும் கவிதை நூல் 'முதற் பரிசு' பெறுகிறது.*

*(2) அமுதபாரதி (அமுதோன்),*

*2, சிவஞானம் சாலை,*
*தி. நகர்,*
*சென்னை-600 017.*

*திருவள்ளூர் மாவட்டம் மாமண்டூரில் 31-8-1939 இல் பிறந்தார். தாயார் திருமதி வள்ளியம்மாள், தந்தையார் திரு. மா. குமாரசாமி.*

*8 கவிதை நூல்கள் எழுதியுள்ளார். தமிழக அரசின் 'பாவேந்தர் விருது' பெற்றுள்ளார்.*

*ஓவியத் துறையில் பல்லாயிரக்கணக்கான புத்தகங்களின் மேலட்டை ஓவியங்களையும், உலகத் தமிழ் மாநாட்டின் சிறப்பு மலர்கள், மற்றும் கிழமை, திங்கள் இதழ்கள், ஆகியவற்றுக்கான சித்திரங்களையும் வரைந்து புகழ் பெற்றவர்.*

*இவர் எழுதிய 'ஐக்கூ அருவிகள்' எனும் நூல் இரண்டாம் பரிசுப் பெறுகிறது.*

*(3) யுக. பாரதி,*

டி-1/7, தெற்கு சிவன் கோயில் தெரு,
புலியூர் வீட்டுவசதி குடியிருப்பு,
கோடம்பாக்கம், சென்னை-600 024.

தஞ்சாவூரில் 2-12-1976 இல் பிறந்தவர். தாயார் திருமதி வசந்தி, தந்தையார் திரு. த.கா.பரமசிவம்.

'கணையாழி' இலக்கிய மாத இதழில் பணிபுரிந்து வருகிறார்.

இவர் எழுதிய 'மனப்பத்தாயம்' எனும் கவிதை மூன்றாம் பரிசு பெறுகிறது.

*(4) பாவை சந்திரன்,*

92, டி.எஸ்.வி. கோயில் தெரு,
சென்னை-600 004.

தஞ்சாவூர் மாவட்டம் பனங்குடியில் பிறந்தவர். தாயார் திருமதி பட்டம்மாள், தந்தையார் திரு சௌந்தரராஜன்.

டெக்கமரான் கதைகள் மொழிபெயர்ப்பு, திரட்டு-தொகுப்பு நூல், இலங்கைத் தமிழர் போராட்ட வரலாறு, தினம் தினம் ஒரு கதை (குழந்தைகள் கதை) போன்ற நூல்கள் எழுதியுள்ளார். தினமணி கதிரில் எழுத்துப்பணியைத் தொடங்கிய இவர் குங்குமம், முத்தாரம், வண்ணத்திரை, புதியபார்வை ஆகிய இதழ்களின் ஆசிரியர் குழுவில் பணிபுரிந்துள்ளார்.

இவர் எழுதிய நல்ல நிலம் (தலைமுறை நாவல்) எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

*(5) தேவகாந்தன்,*

87, பசனைக் கோயில் தெரு,
சூளைமேடு, சென்னை-600 094.

ஸ்ரீலங்கா, யாழ்ப்பாணம் மாவட்டம், காவகச்சேரி எனும் ஊரில் 21-7-1947 இல் பிறந்தவர். தாயார் திருமதி கு. கனகம்மா, தந்தையார் திரு. சி. குமாரசாமி.

எழுதாத சரித்திரங்கள், விதி, நெருப்பு, திசைகள், முதலிய ஏழு நூல்கள் எழுதியுள்ளார். ஈழநாடு தேசிய தினசரியின் ஆசிரியர் குழுவில் பணி புரிந்துள்ளார்.

இவர் எழுதிய *'கனவுச் சிறை'* எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

***(6) சுப்ரபாரதி மணியன்,***

*8/707சி. பாண்டியன் நகர்,*
*திருப்பூர்-641 602.*

கோயம்புத்தூர் மாவட்டம் திருப்பூரில் 20-7-1956 இல் பிறந்தவர். தாயார் திருமதி பழனியம்மாள், தந்தையார் திரு. பழனிச்சாமி, இவர் 12 நூல்கள் எழுதியுள்ளார்.

இவர் எழுதிய *'சாயத் திரை'* எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

***(7) எம்.வி. வெங்கட்ராம்,***

தோப்புத்தெரு, கும்பகோணம்

இவர் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் 18-5-1920 இல் பிறந்தவர். தாயார் திருமதி சரசுவதி, தந்தையார் திரு வெங்கடாசலம்.

நித்யகன்னி, யாத்ரா, இருட்டு, வேள்வித் தீ, அரும்பு, ஒரு பெண் போராடுகிறாள், காதுகள் போன்ற நாவல்களையும் 200-க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளார். சாகித்ய அகாதெமி விருது பெற்றுள்ளவர்.

இவர் எழுதிய *'எம்.வி. வெங்கட்ராம் கதைகள்'* எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

***(8) பிருந்தா நாகராசன் (கிருஷாங்கினி),***

*எண்.98, சிட்லப்பாக்கம்,*
*இரண்டாவது முதன்மைச் சாலை,*
*தாம்பரம் சானிடோரியம் (கிழக்கு)*
*சென்னை-600 047.*

இவர் கோவை மாவட்டம், தாராபுரத்தில் 20-11-1948 இல் பிறந்தார். தாயார் திருமதி சம்பூர்ணம், தந்தையார் திரு.க.வெ. வைத்தீசுவரன்.

கானல் சதுரம் (கவிதைத் தொகுதி) எனும் நூல் எழுதியுள்ளார். இவரது கதைகளும் கவிதைகளும் வார, திங்கள் இதழ்களில் இடம் பெற்றுள்ளன.

இவர் எழுதிய *'சமகாலப் புள்ளிகள்'* எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

*(9)* பாவண்ணன் (பாஸ்கரன்),

95-B, 19th Cross
Lakshmipuram,
Ulsoor, Bangalore-8.

விழுப்புரம் மாவட்டம் வளவனூரில் 6-1-1958 இல் பிறந்தவர். தாயார் திருமதி சகுந்தலா, தந்தையார் திரு பலராமன்.

எட்டு சிறுகதைத் தொகுதிகள், இரண்டு குறு நாவல்கள், மூன்று நாவல்கள் எழுதியுள்ளார். ஒரு கவிதைத் தொகுதியைப் படைத்து ஒன்பது மொழிபெயர்ப்புகளையும் செய்துள்ளார்.

இவர் எழுதியுள்ள *'அடுக்கு மாளிகை'* எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

*(10)* கா. அரங்கசாமி,

450, தமிழ் நகர்,
கோபிசெட்டிபாளையம்-638 452.

ஈரோடு மாவட்டம் ஆட்டையாம்பாளையம் எனும் ஊரில் 22-10-1937 இல் பிறந்தவர். தாயார் திருமதி பழனியம்மாள், தந்தையார் திரு. காசிலிங்கம்.

வானிலா (கவிதை நாடகம்), கொங்குக் கட்டுரை மணிகள், கொங்கு நாட்டுப் புலவர்கள், கொங்கு நாட்டுப் புறப்பாடல்கள் (ஆய்வுக் கட்டுரைகள்) அறிவியலும், பண்பாடும், பூந்துறை நாட்டு காட கூட்ட வேளாளர் வரலாறு, பூந்துறைப் புராணம் (பதிப்பாசிரியர்) மனோன்மணியம் ஆய்வுக் கட்டுரைகள், கருணை அந்தாதி ஆகிய 9 நூல்கள் எழுதியுள்ளவர்.

1995-ஆம் ஆண்டுக்கான கவிதை நூலுக்கு தமிழ்நாடு அரசின் மூன்றாம் பரிசினைப் பெற்றுள்ளவர்.

இவர் எழுதியுள்ள *'விடுதலை வீரன் தீரன் சின்னமலை'* எனும் நூல் முதற்பரிசு பெறுகிறது.

*(11) வே. நடராசன் (தமிழன்னைதாசன்),*
*சி/5, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,*
*சைதாப்பேட்டை,*
*சென்னை-600 015.*

*தஞ்சாவூர் மாவட்டம் மேல உழுவூர் எனும் ஊரில் 10-11-1949 இல் பிறந்தவர். தாயார் திருமதி இலக்குமி, தந்தையார் திரு. வேங்கடாசலம்.*

*அறுசுவை கவிதைகள் (இயல்), ஏழிசைப் பாடல்கள் (இசை), ஆகிய நூல்கள் எழுதியுள்ளார்.*

*இவர் எழுதிய 'செருக்கழித்த செந்தமிழன்' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.*

*(12) ப. முருகேசன்,*

*9, மொட்டையப்படையாட்சி வீதி,*
*முதலியார்பேட்டை, புதுச்சேரி-605 004.*

*இவர் புதுச்சேரியில் 14-10-1951 இல் பிறந்தார், தாயார் திருமதி கனகவல்லி, தந்தையார் திரு. பழனிமுத்து.*

*பார்வைகள், வண்ணங்கள், போன்ற சிறுகதை தொகுப்புகளையும், சனவரியில் மலரும் டிசம்பர் பூக்கள், ஆட்டுக்கடாக்கள், புத்த ஞாயிறு, சிறுதுளி போன்ற நாடக நூல்களையும் எழுதியுள்ளார்.*

*80-க்கு மேற்பட்ட சிறுகதைகளையும் 80-க்கு மேற்பட்ட வானொலி நாடகங்களையும் படைத்துள்ளவர்.*

*தமிழ்நாடு அரசின் சிறுகதை நூலுக்கான முதல் பரிசு பெற்றவர்.*

*இவர் எழுதியுள்ள 'வானத்துக்கு வேலி' எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.*

*(13) முனைவர் க. இரத்னம்,*
*19-பி, திருச்சி சாலை,*
*சூலூர் (அஞ்சல்),*
*கோயம்புத்தூர் மாவட்டம்-641 402.*

*இவர் கோயம்புத்தூர் மாவட்டம், கீரணத்தம் எனும் ஊரில் 13-12-1931 இல் பிறந்தவர். தாயார் திருமதி பெரியம்மாள், தந்தையார் திரு. கப்பினி.*

பேதை நெஞ்சம் (வசனகவிதை), கல்லும் மண்ணும் (புதினம்), சிறகுகள் (சிறுகதை) ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

இவர் எழுதிய **'இவர்கள் பார்வையில் அகலிகை'** எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

***(14)*** *முனைவர் ச. அகத்தியலிங்கம்,*

*155, மாரியப்ப நகர்,*
*அண்ணாமலை நகர்,*
*அஞ்சல்-608 002.*

கன்னியாகுமரி மாவட்டம் கேசவன் புதூரில் 19-8-1929 இல் பிறந்தவர். தாயார் திருமதி அருணாசலத்தம்மாள், தந்தையார் திரு. ம. சண்முகம்.

"சங்கத் தமிழ்" எனும் பெயரில் ஐந்து தொகுதி நூல்களையும், "உலக மொழிகள்" எனும் பெயரில் ஐந்து தொகுதி நூல்களையும், "திராவிட மொழிகள்" எனும் பெயரில் இரண்டு தொகுதி நூல்களையும் எழுதியுள்ளார்.

இவர் எழுதிய **'கவிதை உருவாக்கம்'** எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

***(15)*** *முனைவர் ந. முத்துமோகன்,*

*தலைவர்,*
*குருநானக் ஆய்வுத் துறை,*
*மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,*
*மதுரை-625 021.*

திருநெல்வேலி மாவட்டம், சிதம்பரம், களக்காடு எனும் ஊரில் 25-8-1952 இல் பிறந்தவர். தாயார் திருமதி பவானி, தந்தையார் திரு. மு. நடராசன்.

சீக்கியம்-வரலாறும் கருத்தியலும், சீக்கியமும் தமிழும், இன்றைய மார்க்சியம் நோக்கி ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

இவர் எழுதிய **'அமைப்பியல்-பின் அமைப்பியல்'** எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

***(16) கோ. திருஞானம்,***

*94, மாதாகோயில் தெரு,*
*மாமல்லபுரம்-603 104.*

திருவாரூர் மாவட்டம், பவித்திரமாணிக்கம் எனும் ஊரில் *5-1-1943* இல் பிறந்தவர். தாயார் திருமதி பாக்கியம், தந்தையார் திரு. சி. கோவிந்தராசன்.

1996 ஆம் ஆண்டில் வெளிவந்த ஓவியக்கோடு என்ற நூலுக்கு தமிழ்நாடு அரசின் முதல் பரிசை பெற்றுள்ளவர்.

இவர் எழுதிய **'உருவக்கோடுகள்'** எனும் நூல் முதற்பரிசு பெறுகிறது.

***(17) ஏ. அருணாசலம்,***

*கலையாசிரியர்,*
*இ.ம. அரசு உயர்நிலைப்பள்ளி,*
*பண் பொழி, தென்காசி,*
*திருநெல்வேலி மாவட்டம்-627 807.*

திருநெல்வேலி மாவட்டம், உடையார்பட்டி என்ற ஊரில் *7-10-1954* இல் பிறந்தவர். தாயார் திருமதி ஜானகி அம்மாள், தந்தையார் திரு. இ. மூக்கையா.

ஓவியக்கலை, நிழற்படக்கலை ஆகியவற்றில் ஆர்வம் உள்ளவர். 'தென்பாண்டித் தமிழரின் சிலம்ப வரலாறும் அடிமுறைகளும்' (முதல் தொகுதி) என்ற நூலுக்கு தமிழக அரசின் முதற்பரிசை பெற்றவர்.

இவர் எழுதிய 'தென்பாண்டித் தமிழரின் சிலம்ப வரலாறும் அடிமுறைகளும் (தொகுதி-2)' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

***(18) முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்,***

*ஏ4, தமிழ்ப்பல்கலைக் கழகக் குடியிருப்பு,*
*தஞ்சாவூர்.*

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் *6-4-1943* இல் பிறந்தவர். தாயார் திருமதி செல்லம்மாள், தந்தையார் திரு.மு. வெங்கடாசலம்.

எழுத்தாளர்-சிறுகதை நாடக ஆசிரியர் - கவிஞரான இவர் 12 நூல்களை எழுதியுள்ளார்.

இவர் எழுதியுள்ள 'சங்க இலக்கியத்தில் கலையும், கலைக்கோட்பாடும்' எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

**(19) முனைவர் ந. வேலுசாமி,**

8-சி. ரகுராம் குடியிருப்பு,
காந்தி சாலை,
குமாரசாமிப்பட்டி,
சேலம்-636 007.

நாமக்கல் மாவட்டம், சுங்கக்காரம்பட்டி எனும் ஊரில் 14-08-1948 இல் பிறந்தவர். தாயார் திருமதி காளியம்மாள், தந்தையார் திரு. மு. நல்லையன்.

இவர் 12 நூல்களும், 40 ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகம் இவரது இலக்கியப் பணிக்காக டி.லிட். பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது. 'குடியைக் கெடுத்த குடிப்பழக்கம்' என்ற நூலுக்கு இந்திய அரசின் தேசிய விருது பெற்றுள்ளவர்.

இவர் எழுதியுள்ள "சமூக விஞ்ஞானி பெரியார்" எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

**(20) முனைவர் கா.மு. பாதுசா,**

பதிவாளா,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
அபிசேகப்பட்டி,
திருநெல்வேலி.

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், வல்லம் எனும் ஊரில் 25-5-1946 இல் பிறந்தவர். தாயார் திருமதி வரிசை மீரான், தந்தையார் திரு. சி. காதர் மீரான்.

கிராம வங்கி, வக்பு நிர்வாகமும் வளர்ச்சியும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளில் வெற்றி பெறுங்கள் ஆகிய நூல்களும் 15 தொகுப்பு நூல்களும் எழுதியுள்ளார்.

சிறந்த கட்டுரையாளருக்கான "சதக்கத்துல்லா அப்பா" தேசிய இலக்கிய விருதினையும் பெற்றவர். தமிழக அரசின் விருதினையும் பெற்றுள்ளவர்.

இவர் எழுதிய 'தமிழ்நாடு சட்டமன்ற பேரவை-ஒரு கண்ணோட்டம்' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

***(21) அகம்பன்,***

*14/2, புதுப்பேட்டை தோட்டத்தெரு,*
*இராயபேட்டை,*
*சென்னை-14.*

திருவண்ணாமலை மாவட்டம் திரும்பறம்பூர் எனும் ஊரில் 22-8-1920 இல் பிறந்தவர். தாயார் திருமதி மாணிக்கம் அம்மாள், தந்தையார் திரு. நல்ல அகத்தியப்ப நயினார்.

1971-ஆம் ஆண்டு தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்று நிறுவனத்தின் தேசிய விருதும் பட்டயமும் பெற்றவர்.

எல்லோருக்கும் இலவசக் கல்வி, அகிம்சை வழியில் சமதர்மம் ஆகிய நூல்கள் எழுதியுள்ளார்.

இவருடைய ***'அகிம்சை வழியில் சமதர்மம்'*** எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

***(22) முனைவர் எம். எலியாசு,***

*புனித வளவனார் தன்னாட்சிக் கல்லூரி,*
*திருச்சிராப்பள்ளி-620 002.*

கன்னியாகுமரி மாவட்டம், வட்டமாவு எனும் ஊரில் 7-6-1950 இல் பிறந்தவர். தாயார் திருமதி மரியநேசம், தந்தையார் திரு. மரியசெபஸ்டியான்.

ஆங்கிலத்தில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல வெளியிட்டுள்ளவர். இவர் எழுதியுள்ள ***"உங்களுக்குள்ளேயே உலகாளும் சக்தி"*** எனும் நூல் முதல் பரிசு பெறுகிறது.

***(23) புலவர் என். இ. இராமலிங்கம்,***

*திருவள்ளுவர் இல்லம்,*
*17, இலாயிட்சு அவென்யூ,*
*ஆதம்பாக்கம்,*
*சென்னை-600 088.*

செங்கல்பட்டு நந்திவரம் கிராமத்தில் 27-4-1931 இல் பிறந்தவர். தாயார் திருமதி பாப்பாத்தி அம்மாள், தந்தையார் திரு.வே. ஏழுமலை.

இவர் இறைமையும் முறைமையும், இனிய காண்போம், செயற்கரிய செய்த பெரியோர், உங்கள் சிந்தனைக்கு, புறநானூறும் வாழ்வியலும், இந்திய விடுதலைச் சுவடுகள், இந்திய விடுதலைச் சிற்பிகள் போன்ற பதினோரு நூல்கள்ள எழுதியுள்ளார்.

'இறைமையும் முறைமையும்' என்ற நூலுக்கு தமிழக அரசின் முதற்பரிசினைப் பெற்றுள்ளார்.

திருக்குறள் நெறித்தோன்றல், வள்ளுவ மாமணி, திருக்குறள் ஞாயிறு முதலிய விருதுகள் பெற்றுளளார்.

இவர் எழுதியுள்ள 'திருவள்ளுவரின் செயல் நெறிக் கோட்பாடுகள்' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

***(24)* இரா. நடராசன்,**

*56, இரண்டாம் குறுக்குத் தெரு,*
*சின்மயாநகர்,*
*சென்னை-600 011.*

தஞ்சாவூர் மாவட்டம், விஷ்ணவம்பேட்டை எனும் ஊரில் 19-8-1945 இல் பிறந்தவர். தாயார் திருமதி தங்கம், தந்தையார் திரு. பி. இராமச்சந்திரன்.

இவர் மூன்று நூல்கள் எழுதியுள்ளார். சிறந்த பத்திரிகையாளர் என்ற முறையில் 'காசா சுப்பாராவ்' விருது பெற்றவர்.

இவர் எழுதியுள்ள 'பொருளியல் வரலாறு' எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

***(25)* ம. அருள்தளபதி,**

*டி-8, பவர் டவர்,*
*91, ஆற்காடு சாலை, விருகம்பாக்கம்,*
*சென்னை-92.*

இவர் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிள்ளையார் பாளையம் என்ற ஊரில் 1-7-1958இல் பிறந்தார். தாயார் திருமதி ஆர். இராஜம்மாள், தந்தையார் திரு. க. மரகதவேலு.

இவர் ஒன்பது நூல்களும், ஆய்வு மற்றும் பொது கட்டுரைகள் முப்பதும் எழுதியுள்ளார்.

இவருக்கு 1998 ஆம் ஆண்டு சிறந்த அறிவியல் நூலாசிரியர் விருதை தமிழக அறிவியல் பேரவையும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகமும் இணைந்து வழங்கியுள்ளது.

இவர் எழுதியுள்ள 'விண்வெளி அறிவியல்' எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

**(26)** கே.என். இராமச்சந்திரன்,

52-ஏ, பாக்கியலட்சுமி நகர்,
இரண்டாவது தெரு,
ஆலப்பாக்கம், சென்னை-600 116.

தஞ்சாவூரில் 2-3-1939 இல் பிறந்தவர். தாயார் திருமதி குஞ்சம்மாள், தந்தையார் திரு. கே.என். நடேசன்.

இவர் வானத்து அதிசயங்கள், நோய்தீர்க்கும் அறிவியல், மருத்துவ அறிவியல், தாவரங்களின் அறிவியல், கி.பி.2500, பூமி அறிவியல், உடல் நல அறிவியல் போன்ற 30 நூல்களை எழுதியுள்ளார்.

இவர் எழுதியுள்ள 'அறிவியல் விளக்கம்-என்னைக் கேட்டால்' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

**(27)** மருத்துவர் திருமதி செயம் கண்ணன்,

4, யுனைடெட் இந்தியா குடியிருப்பு,
6 ஆவது குறுக்குத்தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை-600 024.

தஞ்சாவூரில் 2-6-1947 இல் பிறந்தவர். தாயார் திருமதி பர்வதம், தந்தையார் திரு. நாராயணசாமி.

இவர் மகளிர் மருத்துவம் எனும் நூல் எழுதியுள்ளார்.

தமிழில் மருத்துவக் கட்டுரைகளை நாளிதழ்களிலும், வார, திங்கள் இதழ்களிலும் எழுதிவருபவர், பெண்கள் முன்னேற்றத்தில் மிகுந்த ஈடுபாடுள்ளவர். பிறந்த குழந்தை பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைக்கு மாநில பரிசு பெற்றவர். குடியாசுத் தலைவரின் பரிசினையும் பெற்றுள்ளவர்.

இவர் எழுதியுள்ள 'குழந்தைபேறு மருத்துவம்' எனும் நூல் முதற்பரிசு பெறுகிறது.

**(28) புலவர் மு. பசுமலையரசு,**

*(மு. கோவிந்தராசு)*
*17, ராகவப்ப சாலை,*
*செயபாரதி நகர்,*
*பெங்களூர்-560 033.*

வேலூர் மாவட்டம், திருபத்தூர்-பாராண்ட பள்ளி எனும் ஊரில் 10-11-1949 இல் பிறந்தவர். தாயார் திருமதி நாகம்மாள், தந்தையார் திரு. எம். கோவிந்தராசு.

இவர் கயல்விழி (கவிதை), அரும்பெரும் அறிஞர்கள் அறுவர் ஆகிய நூல்கள் எழுதியுள்ளார். கருநாடக அரசின் தமிழ்-கன்னட மொழிபெயர்ப்பாளர். 1966 ஆம் ஆண்டு கருநாடக அரசின் ராஜ்யோத்சவ விருதும், பெங்களூர் மாநகராட்சியின் கெம்பேகவுடா விருதும் பெற்றுள்ளவர்.

இவர் எழுதியுள்ள "செந்தமிழும் சித்த மருத்துவமும்" எனும் நூல் இரண்டாம் பரிசும் பெறுகிறது.

**(29) மருத்துவர் அ. சின்னதுரை,**

*முனைவர் வ. கந்தசாமி,*
*மருத்துவர் க. வைரவேல் பிரகாஷ்,*
*மே/பா. பிரகாசு பதிப்பகம்,*
*15, நேதாஜி தெரு,*
*சண்முகபுரம்,*
*பழனி-624 601,*
*திண்டுக்கல் மாவட்டம்.*

### 1. அ. சின்னதுரை

திருநெல்வேலி மாவட்டம், சங்கனான் குளம் எனும் ஊரில் 21-7-1951 இல் பிறந்தவர். தாயார் திருமதி அ. முத்தம்மாள், தந்தையார் திரு. கு. அருணாசலம், சுற்றுப்புற நல வாழ்வில் ஆர்வமிக்கவர்.

### 2. முனைவர் வ. கந்தசாமி

விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் 9-1-1940 இல் பிறந்தவர். தாயார் திருமதி குருவம்மாள், தந்தையார் திரு.க. வைரவசாமி.

"தமிழ்நாட்டின் தலவரலாறுகளும் பண்பாட்டுச் சின்னங்களும்" எனும் நூலுக்கு தமிழ்நாடு அரசின் முதற்பரிசைப் பெற்றவர். பொதுமக்களுக்கு பயன்படும் அறிவியல் நூல்களை எழுதுவதில் ஆர்வமிக்கவர்.

### 3. மருத்துவர் க. வைரவேல் பிரகாஷ்

திண்டுக்கல் மாவட்டம், பழனியில் 25-3-1976 இல் பிறந்தவர். தாயார் திருமதி வசந்தா, தந்தையார் திரு. வ. கந்தசாமி. சுற்றுப்புற நலவாழ்வில் ஆர்வமிக்கவர்.

இவர்கள் மூவரும் சேர்ந்து எழுதிய **"மனிதனும் சுற்றுப்புற மாசுபாடும்"** எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

**(30) புலவர் அடிகளாசிரியர்,**

குகையூர் அஞ்சல்,
நயினார் பாளையம் - வழி,
கல்லக்குறிச்சி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்-606 306.

விழுப்புரம் மாவட்டம் குகையூர் எனும் ஊரில் 10-5-1910 இல் பிறந்தவர். தாயார் திருமதி குங்கும அம்மாள், தந்தையார் திரு. பெரியசாமி. 45 நூல்கள் எழுதியுள்ளார். செய்யுள் வடிவத்திலும் உரைநடையிலும் பல நூல்கள் எழுதியுள்ளவர். ஓலைச்சுவடியிலிருந்து பலநூல்களை பதிப்பித்துள்ளவர். செந்நாப் புலவர், கபிலர், தொல்காப்பியச் செம்மல் ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளவர்.

இவர் எழுதியுள்ள **"திருமூலரும் பேருரையும்"** எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

**(31) முனைவர் ந. சுப்புரெட்டியார்,**

"வேங்கடம்"
ஏடி 13, மனை எண் 3354,
அண்ணா நகர்,
சென்னை-600 040.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கோட்டத்தூர் என்னும் ஊரில் 27-8-1916 இல் பிறந்தவர். தாயார் திருமதி ஞானி, தந்தையார் திரு. நல்லப்பர். இவர் 116 நூல்கள் எழுதியுள்ளார்.

தமிழ்ப்பேரவைச் செம்மல், சடகோபன் பொன்னடி, அருங்கலைக்கோன் என்ற பட்டங்களையும் இராதாகிருஷ்ணன் விருது, இராமதாசர் விருது, தமிழக அரசின் திரு.வி.க. விருது, ஆகிய விருதுகளையும் பெற்றுள்ளவர்.

இவர் எழுதியுள்ள 'வைணவமும் தமிழும்' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

(32) பகீரதன்,
2, தாமசு சாலை,
தியாகராய நகர்,
சென்னை-600 017.

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் எனும் ஊரில் 18-12-1919 இல் பிறந்தவர். தாயார் திருமதி தனபாக்கியம், தந்தையார் திரு.எஸ்.என். கிருஷ்ணசாமி. நான்கு சிறுகதைகள் எழுதியுள்ளார். இவர் தேன் மொழியால், முல்லைவனத்து மோகினி, உழைப்பால் உயர்ந்த ஏழை, பொன்னி எங்கே? மேவார் அரண்மனை போன்ற 14 சமூக நாவல்களையும் நூற்றுக்கணக்கான பயணக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

1995 ஆம் ஆண்டில் வெளிவந்த இவருடைய "போக பூமியில் ஒரு யோக தீபம்" என்ற நூல் தமிழக அரசின் முதல் பரிசினைப் பெற்றது. இவர் தமிழக அரசின் கலைமாமணி விருதுப்பெற்றவர்.

இவர் எழுதியுள்ள 'சக்தி வழிபாடு' எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

(33) மருத்துவர் இரா. வசந்தகுமார்,
மே/பா. சோலை இயக்கம்,
கிறிஸ்டியன் பேட்டை,
வேலூர்-632 059.

ஆந்திரமாநிலம், குண்டூர் மாவட்டம், பரேசெர்லா, என்ற ஊரில் 17-3-1943 இல் பிறந்தவர், தாயார் திருமதி அனுசுயா, தந்தையார் மருத்துவர் வி.பி. இராமமூர்த்தி.

கோழிவளர்ப்பு, பால்பண்ணை - கால்நடை தெய்வங்கள் போன்ற நூல்கள் எழுதியுள்ளார். இதழ்களில் கட்டுரை எழுதி வருபவர். இவர் வானொலியில் 300-க்கு மேற்பட்ட சொற்பொழிவுகளை வழங்கியுள்ளார்.

இவர் எழுதியுள்ள 'நடமாடும் புரத வங்கிகள்' எனும் நூல் முதல் பரிசு பெறுகிறது.

**34.** **ப. பீர் முகமது,**

*எண்.6/எம்.ஐ.ஜி.,*
*பட்டினப்பாக்கம்,*
*சென்னை-600 028.*

*கன்னியாகுமரி மாவட்டம், மணலிக்கரை எனும் ஊரில் 15-5-1946 இல் பிறந்தவர். தாயார் திருமதி முகமது பாத்திமா, தந்தையார் திரு. பக்கீர்கான்.*

*சென்னை திரைப்படக் கல்லூரியில் பாடத்திட்டத்தை உருவாக்கியவர். திரைப்படக்கலையினைப் பற்றி இதழ்களில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.*

*இவர் எழுதியுள்ள* **'திரைப்படம் - ஒரு வாழும் கலை'** *என்னும் நூல் முதற்பரிசு பெறுகிறது.*

**35.** **திரு. இர. இராமசாமி,**

*(இராம்குமார்),*
*56-இ, பாரதிதாசன் காலனி,*
*கே.கே.நகர், சென்னை-600 078.*

*விழுப்புரம் மாவட்டம் சொரையபட்டு எனும ஊரில 21-9-1952 இல் பிறந்தவர். தந்தையார் திரு. ச. இரத்தினம்.*

*கணிப்பொறி அறிவியல், இண்டர் நெட், மல்டிமீடியா, சொற்களஞ்சியம், கணிப்பொறியின் பயன்கள், ஆகிய அறிவியல் நூல்களையும் இந்திய பாரம்பரியக் கதைகள் போன்ற நூல்களையும் எழுதியுளளார்*

*கணிப்பொறி அகராதி என்னும் இவருடைய நூல் 1992 ஆம் ஆண்டின் தமிழக அரசின் முதற்பரிசினைப் பெற்றது.*

*இவர் எழுதியுள்ள 'தகவல் தொழில் நுட்பம்' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.*

**36.** **முனைவர் எச்.எஸ்.எஸ். லாரன்ஸ்,**

*ஏ.ஜே.16, 2481, அண்ணாநகர்,*
*சென்னை-600 040.*

*கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் 28-7-1923 அன்று பிறந்தவர். தந்தையார் திரு. சர்ம ஆரீசு.*

இவர் எழுதிய 'கல்வி இயல்' எனும் நூல் 1986 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசின் முதற் பரிசினைப் பெற்றுள்ளது.

"தொழிற்கல்வித் தந்தை" எனும் பட்டத்தைப் பெற்றுள்ளார். சென்னை நடுநகர் ரோட்டரிக் குழுவின் சாதனையாளர் விருதினையும் டெல்லி நிர்வாக இயல் மேம்பாட்டுக் கழகத்தின் சாதனையாளர் விருதினையும் பெற்றுள்ளார். இவர் பள்ளிக்கல்வி இயக்குநராகப் பணியாற்றிய பொழுது தமிழ்நாட்டில் மேல்நிலைக் கல்வியும் தொழிற்கல்வியும் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் தமிழ்நாட்டில் மாநிலக்கல்வி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது.

இவர் எழுதியுள்ள "மேல்நிலைக் கல்வியில் தொழிற்கல்வி" என்ற நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

*37.* சு.பொ. அகத்தியலிங்கம்,

2/685, திருவூர் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு,
திருவூர் அஞ்சல்,
திருவள்ளூர் மாவட்டம்-602 025.

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் எனும் ஊரில் 15-6-1953 இல் பிறந்தவர். தாயார் திருமதி. தங்கம்மாள், தந்தையார் திரு. நா. பொன்னப்பிள்ளை.

இவர் சிந்திக்கும் வேளையில் குறள், என் கேள்விக்கு என்ன பதில், மனித உரிமைகள் என்ற மூன்று நூல்களை எழுதியுள்ளார்.

இவர் எழுதியுள்ள 'விடுதலைத் தழும்புகள்' எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

*38.* அ.மா. சாமி,

(குரும்பூர் குப்புசாமி), கிரசண்டு சாலை,
செனாய் நகர்,
சென்னை-600 030.

விருதுநகர் மாவட்டம் கோப்பை நாயக்கன் பட்டியில் 7-5-1935 இல் பிறந்தவர். தாயார் திருமதி. இராசமணி. தந்தையார் திரு. அ.மு. அருணாசலம்.

பூங்குழலி, பாண்டியகுமாரன், ரெங்கநாயகி, பொன்வண்டு, கரும்பு, தாரா போன்ற நூற்றுக் கணக்கான நாவல்களையும், பல பயணக் கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார்.

அருந்தமிழ் வல்லார், இதழ் தமிழ் வல்லார், மதுரத் தமிழ்மாமணி, இதழியல் வித்தகர், இதழியல் சுடர் எனப் பல பட்டங்கள் பெற்றுள்ளார்.

"19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள்" எனும் நூலுக்கு 1992 ஆம் ஆண்டில் தமிழக அரசின் மூன்றாம் பரிசு பெற்றுள்ளார்.

இவர் எழுதியுள்ள **"இந்திய விடுதலைப்போர்-செந்தமிழ் தந்தசீர்"** எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

***39.*** *முனைவர் ஏ. ஏகாம்பரநாதன்,*

*பேராசிரியர்,*
*தொல்லியல் மற்றும் பண்டைய வரலாற்றுத் துறை,*
*சென்னைப் பல்கலைக்கழகம்,*
*சென்னை-600 005.*

கன்னியாகுமரி மாவட்டம், பூவியூர் எனும் ஊரில் 11-7-1948 இல் பிறந்தவர். தாயார் திருமதி ஆ. தங்கம்மாள். தந்தையார் திரு. கு. ஏகராஜமார்த்தாண்டன்.

14 நூல்களையும், 40-க்கு மேற்பட்ட கட்டுரைகளையும் தமிழில் எழுதியுள்ளார். 1993 ஆம் ஆண்டு "கழுகு மலையில் சமணம்" எனும் நூலுக்கு தமிழக அரசின் பரிசினைப் பெற்றவர்.

இவர் எழுதியுள்ள **"சோழர் ஆட்சியில் சமண சமய வளர்ச்சி"** எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

***40.*** *கலைப் பொழிலன்,*

*(எம்.எஸ். தர்மலிங்கம்),*
*2, பண்டாரத் தெரு, குன்றத்தூர்,*
*சென்னை-600 069.*

காஞ்சிபுர மாவட்டம் குன்றத்தூரில் 13-11-1937 இல் பிறந்தவர். தாயார் திருமதி குப்பம்மாள். தந்தையார் திரு. எம்.கே. சிவலிங்கம்.

ஒரு கொடியில் இருமலர்கள், உயிர்ப்பூ, கண்ணீர் புஷ்பங்கள் போன்ற புதினங்களையும், பலரின் வாழ்க்கை வரலாற்றினையும் எழுதியுள்ளார். 71 சிறுகதைகளும், 103 கவிதைகளும் படைத்துள்ளார்.

இவர் எழுதியுள்ள **"சித்திரப் பூக்கள்"** எனும் நூல் முதற்பரிசு பெறுகிறது.

**41. ச. கலியாணராமன்,**
மந்தாரக் குப்பம் காலனி,
நெய்வேலி-607 802.

தஞ்சை மாவட்டம் பந்தநல்லூர் என்ற ஊரில் 22-3-1936 இல் பிறந்தவர். தாயார் திருமதி இராசம்மா, தந்தையார் திரு. சக்கரபாணி.

பல்வேறு தமிழ் இதழ்களில் சுமார் நூறு சிறுகதைகள் எழுதியுள்ளார். ஆறுமேடை நாடகங்களையும் 20 நூல்களையும் படைத்துள்ளார்.

1970 இல் வெளியான 'இன்பத்துள் இன்பம்' என்ற இவரின் நாடக நூலுக்கு தமிழக அரசின் இரண்டாம் பரிசு கிடைக்கப்பெற்றது.

1985 ஆம் ஆண்டு வெளியான 'உதயகுமரன் காதல்' என்ற ஆராய்ச்சி நூலுக்கும் தமிழக அரசின் முதற்பரிசு கிடைத்தது.

இவர் எழுதியுள்ள 'நெல்சன் மண்டேலா' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

**42. சிவன்,**
16/25, இராணி அண்ணா நகர்,
பிடிராஜன் சாலை,
கே.கே. நகர், சென்னை-600 078.

திண்டுக்கல்லில் 22-6-1955 இல் பிறந்தவர். தாயார் திருமதி பானுமதி, தந்தையார் திரு. ஈ.எஸ். பாஸ்கரன்.

எழுபத்தைந்து நூல்கள் எழுதியுள்ளார்.

இவர் எழுதியுள்ள "இந்திய விஞ்ஞானிகள்" எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

## அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் நிதியுதவி வழங்கும் திட்டம்

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் 1978ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பெற்றது. இத்திட்டத்தின்படி திங்கள் தோறும் ரூ.400 நிதியுதவியாக வழக்கப்பட்டு வந்தது. இத்தொகை 10-9-1996 முதல் ரூ.500 ஆக உயர்த்தப்பட்டது. மேலும் 24-4-1998 ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி (ம) பண்பாட்டுத் துறைக் கடித நிலை எண்.94 தவ1-2/98 இன்படி வாழ்நாள் முடிய நிதியுதவி வழங்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி இதுவரை மொத்தம் 459 தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கப்பெற்றுள்ளது. இவ்வாண்டில் 8 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கப்பெறுகிறது.

| | | |
|---|---|---|
| 1977-78 | - | 5 |
| 1978-79 | - | 28 |
| 1979-80 | - | 34 |
| 1980-81 | - | 29 |
| 1981-82 | - | 25 |
| 1982-83 | - | 31 |
| 1983-84 | - | 32 |
| 1984-85 | - | 30 |
| 1985-86 | - | 30 |
| 1986-87 | - | 30 |
| 1987-88 | - | 27 |
| 1988-89 | - | 21 |
| 1989-90 | - | 17 |
| 1990-91 | - | 21 |
| 1991-92 | - | 20 |
| 1992-93 | - | 16 |

| | | |
|---|---|---|
| *1993-94* | - | *17* |
| *1994-95* | - | *15* |
| *1995-96* | - | *13* |
| *1996-97* | - | *7* |
| *1997-98* | - | *4* |
| *1998-99* | - | *7* |
| மொத்தம் | .. | ***459*** |

## 1999-2000 ஆம் ஆண்டில் நிதியுதவி பெறும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள்

1. திரு. ஆற்றலரசு
2சி, வைத்தியராமன் தெரு,
தியாகராயர் நகர், சென்னை-17.

2. திரு. எம்.கே. சுப்பிரமணியன் (மல்லை மணியன்)
40. எப். கிருஷ்ணசாமி நாயுடு வீதி,
ஒண்டிப்புதூர், கோயம்புத்தூர்-16.

3. திரு. அரு. அருமைநாதன்,
10, சோமசுந்தர விநாயகர் கோயில்,
2 ஆவது தெரு, பெரம்பூர், சென்னை-11.

4. திரு. எஸ்.எஸ். பழனிச்சாமி (அழகு பழனிச்சாமி)
36, சூடியம்மன் பேட்டைத் தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-15.

5. திரு. செ. பூபதி,
346, 'எல்' பிளாக்,
குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு,
கல்லறைச் சாலை, சென்னை-21.

6. திரு. கர்ணன்,
1, கான்சாபுரம் மெயின்ரோடு,
கோரிப்பாளையம், மதுரை-2.

7. புலவர் பா. ஆழ்வார்,
780, 'ஜே' பிளாக்கு,
கிழக்கு கல்லறைச் சாலை,
(வண்ணை), சென்னை-21.

8. திருமதி க. சரஸ்வதி,
4-9 ஆவது தெரு,
வ.உ.சி. நகர்,
ரமணாஸ்ரமம் அஞ்சல்,
திருவண்ணாமலை-606 603.

## 'ஆட்சித் தமிழ்'

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு, இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களைத் துணைத் தலைவராகவும், தமிழறிஞர்கள் பலரை உறுப்பினர்களாகவும் கொண்டு, தமிழக அரசால் அமைக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் (4-11-1998) தமிழ்நாடு அரசு அலுவலர்கள்/பணியாளர்கள் தேர்வாணையத்தால் நடத்தப்பெறவுள்ள 'ஆட்சித் தமிழ்' என்னும் தேர்வினை எழுதித் தேர்ச்சிப் பெற்றால்தான் அவர்களின் தகுதிகாண் பருவம் முடிக்கப்பெறும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தின் முதற்கட்ட செயல் வடிவமாகத் தமிழ் வளர்ச்சித் துறையால் தயாரிக்கப்பட்டதே 'ஆட்சித் தமிழ்' எனும் நூல். 312 பக்கங்களைக் கொண்ட இந்நூலில்,

1. தமிழ் ஆட்சிமொழி வரலாறு
2. ஆட்சிமொழித் திட்ட அரசாணைகளின் சுருக்கம்
3. ஆட்சிமொழிச் செயலாக்க ஆய்வில் கண்டறியப்பட்ட உண்மைகள்.
4. குறை களைவு நடவடிக்கைகள்.
5. தமிழ் வளர்ச்சித் திட்டங்களும் பணிகளும்.

எனும் பொருண்மைகளின் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரைகளைத் தமிழ் வளர்ச்சித் துறையின் உதவி இயக்குநர்கள் எழுதியளித்துள்ளனர். அரசுப் பணியில் சேர்கின்ற அனைவரும் ஆட்சிமொழித் திட்டத்தை எளிதில் அறிந்து கொள்ளவும், செயற்படுத்தவும் உதவும் வகையில் செம்மையான முறையில் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலின் விலை ரூ. 37.

**இந்நூல் கிடைக்குமிடங்கள்:**

1. தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
   குறளகம், சென்னை-108.
2. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
   தரமணி, சென்னை-113.

# இந்திய ஆட்சிப் பணித் தேர்வு — கருவி நூல்

## தமிழ் மொழி வரலாறு

இந்திய ஆட்சிப் பணித் தேர்வில் தமிழ்நாடு மாணவர்கள் வெற்றி பெறும் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாகவே குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு மாணவர்களின் தேர்ச்சி விகிதம் அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கில், தமிழில் தேர்வு எழுதினால் மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் வெற்றி பெற வாய்ப்பமையும் எனக் கருதிய தமிழக அரசு, இந்திய ஆட்சிப் பணித் தேர்வுகளைத் தமிழில் எழுதுவதற்கான துறை சார்ந்த கருவி நூல்களை வெளியிட 1997-98 ஆம் ஆண்டு ரூ.3 இலட்சம் அனுமதித்தது. நூல்களை உருவாக்குவதற்கு இந்திய ஆட்சிப் பணி பயிற்சி நிலையத்தில் பணியாற்றுகின்ற பட்டறிவு பெற்றவர்களையும், இந்திய ஆட்சிப்பணித் தேர்வினைத் தமிழில் எழுதி வெற்றி பெற்ற முனைவர் இரா. பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., திரு. த. மெய்ம்மொழி, ஐ.ஓ.எப்.எசு., திரு. வெ. இறையன்பு, இ.ஆ.ப., ஆகியோர்களையும், அந்தந்தத் துறையில் வல்லுநர்களான அறிஞர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட குழு ஒன்று அரசின் சார்பாக அமைக்கப்பட்டது. துறை சார்ந்த நூல்கள் தயாரிக்கும் பணிக்கென பின்வரும் நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டன:—

1. மொழியியல் குழு
2. தமிழ் இலக்கியக் குழு
3. வரலாற்றுக் குழு
4. புவியியல் குழு

தமிழ் இலக்கியத்தை விருப்பப் பாடமாகக் கொண்டு தேர்வு எழுதும் மாணவர்களுக்கு உறுதுணை புரியும் வகையில் தமிழ்மொழி தாள்-1 (குறியீடு-64) பாடத்திட்டத்திற்கிணங்க 'தமிழ்மொழி வரலாறு' என்னும் நூல் அச்சிடப்பட்டு உள்ளது.

இந்நூலில் பின்வரும் பொருண்மைகளில் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன:-

| பொருண்மை. (1) | கட்டுரை ஆசியரியர் (2) |
|---|---|
| 1. இந்தியமொழிக் குடும்பங்கள் | முனைவர் ஜி. ஜான்சாமுவேல் |
| 2. தமிழ் | முனைவர் திரு. நடராசன் |
| 3. தமிழ் எழுத்தின் தோற்றமும் வளர்ச்சியும் | திரு. நடனகாசிநாதன் |
| 4. தமிழ்மொழி வரலாறு | முனைவர் செ.வை. சண்முகம் |
| 5. தற்காலத்தில் தமிழின் வளர்ச்சி | முனைவர் சா. வளவன் |
| 6. தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள் அமைப்பு முறை | முனைவர் சரளா இராசகோபாலன். |
| 7. தமிழ் உருபியல் | முனைவர் பொன். கோதண்டராமன் |
| 8. பெயர்த் தொடர் அமைப்பு | முனைவர் கி. அரங்கன் |
| 9. மொழி | முனைவர் கு. இன்னாசி. |

இதைத் தொடர்ந்து வரலாறு, புவியியல் நூல்களும் தயாரித்து வெளியிடப்படும்.

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

"அய்யன் வள்ளுவனின் அடிதொடரச் 'சூளுரைப்பீர் !
உய்ய வழி வேறில்லை குறளைத் தோள் சுமப்பீர்".

— மாண்புமிகு தமிழக முதல்வர் **கலைஞர்**